முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

முன்னிலை- திரு. எஸ்.என். தனஞ்ஜெயன், B.B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண். 115/2023

**TNTM080001762023**

1. ஏ. அன்புசெல்வம்
2. ஏ. பாண்டியன் ...வாதிகள்

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை
2. வருவாய் கோட்டாட்சியர், செய்யாறு
3. வட்டாட்சியர், வெம்பாக்கம்,
4. வட்டார வளர்ச்சி அலுவலர், வெம்பாக்கம்
5. ஊராட்சிமன்றத்தலைவர், சின்ன ஏழாச்சேரி
6. கிராம நிர்வாக அலுவலர், சின்ன ஏழாச்சேரி. ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 18.03.2024 தேதியன்று விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இது குறித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா ஏ, பி ஷெட்யூல் சொத்துக்களை வாதிகள் அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ அல்லது ஏஜென்ட்டுகளோ அத்துமீறி பிரவேசித்து வந்து வாதிகளின் அமைதியான அனுபவத்தை தடை செய்யக்கூடாது என ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா பி ஷெட்யூல் சொத்தில் உள்ள மாட்டுக்கொட்டகையையும், தோட்டத்தையும் காலி செய்து வாதிகளைச் சட்டப்படியாக அன்றி வெளியேற்றக்கூடாது என ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவுகளை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1, 2 வாதிகள் ஆஜரில்லை. எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை. பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தொடர்ந்து வாய்ப்புகள் கொடுக்கப்பட்டபோதும் விசாரணை தொடங்கப்படவில்லை. வாதிகளின் வருகையின்மை வேண்டுமென்றே உள்ளது. வழக்கு செய்யத்தக்க செய்யாமைக்காக செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறிய பகரப்பட்டது.

S N DHANANJEYAN

Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.04.02 18:27:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.